தவ எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 7 (23—11—71) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 8 (24—11—71) புதன் [இதழ்: 134

உணவு உற்பத்தியில் ஒரு சதவிகிதம் -- வங்க தேச அகதிகட்குச் செலவாகிறது

புதுடில்லி, நவ. 23—

"வங்காள தேச அகதிகளுக்காக 1971—72-ல் மொத்தம் 10.7 இலட்சம் டன் உணவுத் தானியங்கள் (அரிசி, கோதுமை) தேவைப்படும்" என்று துணை உணவு அமைச்சர் ஷிண்டே மக்களவையில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இது, நாட்டின் உணவுத்

(4-ம் பக்கம் பார்க்க)

டிஸ்னியின் அழகு நகரில் கலைஞர்

ஆர்லாண்டோ சிறப்பு விருந்தில் கவிதைப் பாடிச் சிறப்பித்தார்

வாஷிங்டன், நவ. 23—

அமெரிக்காவில் கடந்த சனியன்று சிகிச்சை முடிந்தபின், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்; உலகப் புகழ்பெற்ற 'டிஸ்னி லாண்ட்' என்ற அதிசய நகருக்குச் சென்றார்; சிறந்த திரைப்படத் தயாரிப்பாளரான வால்ட் டிஸ்னி அமைத்ததாகும் இந்த 'அதிசய உலகம்'.

'டிஸ்னி லாண்ட்' என்பது ஒரு தனி நகரமாகவே உருவாக்கப்பட்டிருப்பதாகும்; கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் எண்ணற்ற காட்சிகள் இங்கே அமைந்துள்ளன.

தமிழகத்திலும் இதுபோன்ற இடம் ஒன்றினை அமைக்க வேண்டுமென்று முதலமைச்சர் கருத்தைத் தெரிவித்தார்; அந்த நோக்கத்தின் அடிப்படையில் அவர் அதன் ஒவ்வொரு பகுதியினையும் பார்வையிட்டார்.

ராக்கெட் தளத்தில்...

பின்பு அங்கிருந்து புறப்பட்டு சந்திரனுக்கு அமெரிக்கர்கள் ராக்கெட் அனுப்பும் தளமான கென்னடி முனைக்குச் சென்று அதனைப் பார்வையிட்டார்.

அன்று மாலை சிகாகோ நகருக்குச் சென்று, அங்கு இந்திய அதிகாரிகள் -- இந்திய மாணவர்கள் அளித்த வரவேற்பினை ஏற்றுக் கொண்டார்.

ஆர்லாண்டோ நகரில்...

கடந்த 20—11—71 அன்று கென்னடி முனைக்கு அருகில் உள்ள அழகுமிகு 'ஆர்லாண்டோ' நகருக்குக் கலைஞரும் -- அவரது குழுவினரும் சென்றனர்; எழில்மிக்க ஏரிகள் நிறைந்த இந்தப் பகுதியினை கலைஞர் சுற்றிப்பார்த்து ரசித்தார்; அமெரிக்காவின் பிற பகுதிகளில் குளிராக உள்ள இந்த நேரத்தில் ஆர்லாண்டோ மட்டும் வெப்பமாக இருந்தது.

ஆர்லாண்டோ பகுதியில் உள்ள நுண்கலை மற்றும் கலைக் கழகங்களுக்கு நிதி சேர்க்கும்முகத்தான் நடைபெற்ற சிறப்பு விருந்தில் கலைஞர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (இந்தக் கலைக் கழகங்களின் ஆண்டுச் செலவு ரூ. 7 கோடி); இந்தச் சிறப்பு விழா, பழங்கால முறையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொண்டவர்கள், அமெரிக்க நாட்டின் பழங்குடிகளான சிவப்பு இந்தியர்களின் உடைகளையும் -- அதனையொத்த உடைகளையும் அணிந்திருந்தனர்; இவ்விழாவில் கலந்துகொண்ட கலைஞர், தமிழக உடையான வேட்டி -- சட்டை -- மேல் துண்டு அணிந்து காணப்பட்டார்.

கலை உள்ளம் கொண்ட கலைஞரை அந்நகர் மிகவும் கவர்ந்ததால், தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் -- இச்சிறப்பு விருந்து நடைபெறும் இடத்திலேயே அந்நகரைப்பற்றி அழகுமிகு கவிதை ஒன்றை யாத்துப் படித்தார்.

அவரது கவிதையினால் கவரப்பட்ட அவ்விழாத் தலைவர், அக்கவிதையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட அனுமதி வேண்டினர்; கலைஞரும் அதற்கு இசைவு அளித்தார். இக்கவிதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு அமெரிக்க மக்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

நாவலருக்கு கலைஞர் கடிதம்

அமெரிக்க நாட்டில் உள்ள பால்டிமோர் நகரிலிருந்து முதல்வர் கலைஞர் அவர்கள், அமைச்சர் நாவலருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

நவ. 17-ந் தேதியன்று எழுதப்பட்ட கடிதத்தின் விவரம் வருமாறு:—

"அன்புள்ள நாவலர் அவர்களுக்கு வணக்கம்; தங்கள் நலமும் -- தமிழகத்தார் நலமும் -- அமைச்சர்கள் நலமும் -- துணைவியார், செல்வன் நலமும் -- கழக நண்பர்கள் நலமும் அறிய அவா.

பால்டிமோர் மருத்துவமனையிலிருந்து 24-ந் தேதி முதல தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்னர், டிசம்பர் முதல்வாரம் தமிழகம் வந்து சேருகிறேன்.

தமிழக நிலைமைகளைத் தாங்களும -- ஏனைய அமைச்சர்களும் சீருறக் கவனிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

விரிவான மடல் பிறகு எழுதுகிறேன்; அனைவருக்கும் என் அன்புகூற வேண்டுகிறேன்."

கலைஞருடன் ஜி. பராங்குசம் தொலைபேசித் தொடர்பு

திருச்சி, நவ. 22—

கலைஞர் அவர்களுடன் மேலவைத் தலைமைக் கொறடா ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினர்.

முதல்வர் அவர்கள், உடல்நலமாக இருப்பதாகவும், தமது சுற்றுப்பயணத்தைத்தொடங்கி விட்டதாகவும் நாளை சிகாகோ செல்வதாகவும், அங்கு பல கலைக் கழகத்தில் உரையாற்றப் போவதாக தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

பராங்குசம் அவர்களின் உடல் நலம் பற்றி முதல்வர் விசாரித்தார்.

குழப்பவாதிகளின் வலையில் சிக்காதீர்

நிலைமை உணர்ந்து அமைதியுடன் வேலைக்குத் திரும்புவீர்

சிம்சன் தொழிலாளர்களுக்கு அமைச்சர் என். வி. நடராசன் வேண்டுகோள்

சென்னை, நவ. 23—

"சிம்சன் தொழிலாளர்கள் அமைதி காத்து வழக்கம் போல் மீண்டும் வேலைக்குச் செல்ல வேண்டும்" என்று நேற்றிரவு விடுத்த ஓர் அறிக்கையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்; அவரது அறிக்கை வருமாறு:—

"சிம்சன் கம்பெனி தொழிலாளர்கள் அமைதியாகப் பணியாற்றி வந்துள்ளனர்; சில தொழிற் சங்கத் தலைவர்கள் என்னை நேரில் சந்தித்துத் தொழிற்சாலைக்கு உள்ளும் வெளியிலும் பாதுகாப்புத் தேவை என்று கேட்டனர்.

ஏற்கனவே இருந்துவந்த அந்த ஏற்பாட்டினை மேலும் திட்டவட்டமாகக் கடைபிடிக்குமாறு போலீசு அதிகாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு--அதன்படி நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறிருந்தும், அமைதியைக் கெடுக்கும் வகையில் நேற்று காலை சிம்சன் கம்பெனி யூனிட்டுகளில் பணியாற்றிக் கொண்டிருந்ததொழிலாளர்களை வெளியேற்றும்படியான பலாத்காரச் செயலில் சில தொழிலாளர் தலைவர்கள் ஈடுபட்டிருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அமைதியான முறையில் பிரச்சினைகளை அணுகுவதற்கு இந்த வன்செயல்கள பெரும் தீமையாக ஏற்பட்டிருக்கிறது.

நாடு இன்றுள்ள நிலையில், இதுபோன்ற வேலைநிறுத்தங்கள் எவ்வளவு நட்டத்தையும் சீர்குலைவையும் உண்டாக்குமென்பதை முறை தவறிய செயலில் ஈடுபடுகின்றவர்கள் உணர்ந்து பார்க்காதது வருந்தத்தக்கதாகும்.

இனியாகிலும் அவர்கள் தவறான பாதையில் செல்லமாட்டார்களென்று அரசு எதிர்பார்க்கிறது.

எனவே, வழக்கம்போல் தொழிலாளத் தோழர்கள் அமைதி காத்துத் தொழிற்சாலைக்குச் செல்வார்களென்று எதிர்பார்க்கிறேன்."

தோல்வி கண்ட குழப்பவாதிகளின் அராஜகம்

காட்டூர் கோபால் கடும் கண்டனம்

'தூண்டிவிடும் சுயநலக் கும்பலின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிட வேண்டாம்' என தொழிலாளர்களுக்கு வேண்டுகோள்

நேற்றைய நிகழ்ச்சிப் பற்றித் தொழிற் சங்கத் தலைவர் காட்டூர் கோபால் அவர்களும் அறிக்கை விடுத்துள்ளார்; அவரது அறிக்கை வருமாறு:—

"சிம்சன் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மிக்க அமைதியுடன் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள்; கடந்த நவம்பர் மாதம் முதல் தேதி தொட்டு தொடர்ந்து 15 நாட்களாக ஏனைய எல்லா மாற்று அரசியல் கட்சிகளும -- தொழிற் சங்கங்களும எடுத்துக்கொண்ட முயற்சிகளும், பொய்ப் பிரச்சாரமும், அந்த அமைதியான தொழிலாளர்களை திசை திருப்புவயற்குப் பயனற்றுப் போய்விட்டன.

அவர்களது பொய்ப் பிரச்சாரத்தை நம்பி குழப்பமடைந்திருந்த சிறுபான்மைத் தொழிலாளர்கள்கூடத் தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் ஆலோசனையின் பேரில், 16—11—71 முதல் வேலைக்குத் திரும்பினர்கள்.

அதற்குப் பின்னர், கையெழுத்து இயக்கம் தொடங்கி -- அதிலேயும் தோல்வியுற்றுவிட்ட காரணத்தால், நேற்றையத் தினம் (22—11—71) தொழிற்சாலைக்குள்ளேயே அத்துமீறிப் புகுந்து, அராஜகம் விளைவித்தாவது அமைதியைக் கெடுக்க வேண்டிய பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

இந்த அராஜக சூழ்நிலைகள் விபரீத நிலைக்குக் கொண்டு வந்துவிடாமல் தொழிலாளத் தோழர்கள் -- மாற்றார்கள் எவ்வளவு ஆத்திரத்தைக் கிளப்பியிருந்தும் -- மிக்க அமைதியோடு வேலை செய்யும் இடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

மாற்றுச் சங்கத்தினரால் கிளப்பிவிடப்படும் வீண் வதந்திகள் அல்லது தூண்டிவிடுகின்ற வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றிற்குப் பலியாகிவிடாமல், தொழிலாளர் அமைதியோடு வேலைக்குத் திரும்புமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என். வி. நடராசன் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து

அமைச்சர் என். வி. நடராசன் அவர்களுக்கும் கலைஞர் அவர்கள், பால்டிமோரிலிருந்து 17-ந்தேதியன்று கடிதம் எழுதியுள்ளார்.

என். வி. என். அவர்களது பிறந்த நாளையொட்டி எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில், 'தாங்கள் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார் -- கலைஞர்.

சென்னை நகரில் தடையுத்தரவு

சிம்சன் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் திடீரென வேலைநிறுத்தம் செய்திருப்பதை யொட்டி எழுந்துள்ள நிலையை சமூக விரோதச் சக்திகள் பயன்படுத்திவிடாதபடி தடுப்பதற்காக நேற்று மாலை 5 மணி முதல் சென்னை நகரில், நகரப் போலீசு சட்ட 41-வது பிரிவு பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்பிரகடனத்தை வெளியிட்ட நகரப் போலீசு கமிஷனர் கே. ஆர். ஷெனாய், 'இத்தடையுத்தரவின் கீழ் இன்றுமுதல் 15 நாட்களுக்கு ஊர்வலங்கள் ---- ஆர்ப்பாட்டங்கள் -- கூட்டங்கள் தடை செய்யப்படுகின்றன' என்று அறிவித்துள்ளார்.

வங்கதேசத்தில் பாகிஸ்தான் இராணுவம் படும் பாடு!

மூன்றில் ஒரு பகுதி விடுதலைப் படை வசம்

முழு மூச்சுடன் கொரில்லாத் தாக்குதல் தொடர்கிறது

டாக்கா, நவ. 22—

வங்க தேசத்தில் விடுதலைப் படையினரின் வீரத் தாக்குதல் காரணமாகப் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளிடை மிகுந்த மனச்சோர்வு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

"1,43,000 சதுர கிலோ மீட்டர் பரம்புடைய கிழக்கு வங்கத்தின் மூன்றில் ஒரு பகுதியின் ஆதிக்கம் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லை" என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

50,000-த்துக்கு மேற்பட்ட கொரில்லாக்கள் தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாகவும், இவர்களை எதிர்ப்பதில் மூன்று பாகிஸ்தான் டிவிஷன்களும் 30,000 முன்னணிப் படையினரும் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது; இவர்களுக்குப் பக்கபலமாகப் போலீசும், இரசாக்கர்கள் எனும் அரக்கக் கூட்டமும் இருந்துவருகின்றன.

பாகிஸ்தான் இராணுவத்தின் எஞ்சிய 2,50,000 வீரர்களும் மேற்கு எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்; ஒரு முழு அளவு போர் மூளுமானல் கிழக்கு வங்கத்தில் இருக்கும் துருப்புக்களுக்கு மேற்குப் பாகிஸ்தானுடனை தொடர்பே அற்றுப்போகும் என்பது உறுதியாகும்; ஏனெனில், ஆகாய மார்க்கத்தில் 1,600 கிலோ மீட்டரும், கடல் வழியாக 5,000 கிலோ மீட்டரும் சுற்றித்தான் பாகிஸ்தானின் இரு பிரிவுகளுக்கும் இடையே தொடர்பு கொள்ள முடியும்.

இந்த நிலைமை பாகிஸ்தான் இராணுவத்தினரிடை மன உறுதியைக் குலைத்துவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் படை கொடுத்த அடி

ஜாகீர்கஞ்ச் பகுதியில் வங்க தேச விடுதலைப் படையிடம் வாங்கிய அடி தாங்காமல்தான் பாகிஸ்தான் துருப்புக்கள் கரீம் கஞ்ச் பகுதியில் தனது ஆத்திரத்தைத் திருப்பியதாகத் தோன்றுகிறது.

வங்க விடுதலைப் படையினர் நேற்று ஒரே நேரத்தில் தாக்கி, அத்திராம், ஜாகிர் கஞ்ச் பகுதிகளிலிருந்து பாகிஸ்தான் இராணுவத்தை விரட்டியடித்தனர்.

சில்ஹெட் மாவட்டத்தில் ஜாகிர் கஞ்ச் நகரும் -- அத்திராம் என்ற கிராமமும் கடுமையான சண்டைக்குப்பின் விடுதலைப் படையினரால் விடுவிக்கப்பட்டன; இவ்விரண்டு இடங்களிலும் விடுதலைப் படையினர் நுழைந்தபோது, அவர்கட்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டன; முஜிபுர் ரகிமானின் சொற்பொழிவுகள் ஒலிபரப்பப்பட்டன.

இந்தச் சண்டையில் பாகிஸ்தான் படைக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது: ஆறு பாகிஸ்தான் படை வீரர்களும் இரு போலீசுக்காரர்களும், பல இரசாக்கர்களும் விடுதலைப் படையால் கைது செய்யப்பட்டனர்.

இந்த வாரத் துவக்கத்தில் முகுந்தட்பூர் இரயில் நிலையத்தையும், கௌரா பகுதியில் சுமார் 12 சதுர மைல் பரப்பையும் விடுதலைப் படையினர் மீட்டனர்; பல ஆயுதங்களையும், ஏராளமான வெடி மருந்துகளையும் கைப்பற்றியுள்ளனர்.

பொதுவாக, வங்க தேசத்தில் விடுதலைப் படையினரின் கை ஓங்கி -- மும்முரமான சண்டை நடந்துவருகிறது.

படை நிலைகளைக் கைப்பற்றினர்

முஜிப் நகர், நவ. 23—

வங்காள தேசத்தில் தெற்கே குல்னாவிலிருந்து வடக்கே இரங்கட்பூர், சில்ஹெட் வரையிலுள்ள பகுதியில் 10 பாகிஸ்தான் படை நிலைகளை விடுதலைப் படையின் கொரில்லாப் படையினர் பிடித்துவிட்டனர்.

இணக்கமான முறையில் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இவற்றைக் கைப்பற்றினர்.

சென்ற வெள்ளிக்கிழமையிலிருந்து நடைபெற்றுவந்த இப்போரில் எல்லா இடங்களிலும் பாகிஸ்தான் படைகளுக்கு ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்பட்டது.

ஆதிக்கத்தை இழந்தனர்

குல்னா மாவட்டத்தில் பாகிஸ்தான் படைகளுக்குப் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டதையடுத்து, விடுதலைப் படையின் நிலைகளைப் பாகிஸ்தான் விமானங்கள் தாக்கின; அதில் ஒரு மேஜர் உட்பட சிலர் மாண்டனர்.

குஷ்டியா -- ஜெஸ்சூர் எல்லைக்கு இடையில் 1,700 சதுர மைல் பரப்புள்ள பகுதியைக் கொரில்லாக்கள் விடுவித்துவிட்டனர்.

சூர்னி ஆற்றின் வடக்குக் கரை இப்போது விடுதலைப் படை ஆதிக்கத்திலிருக்கிறது.

கேகர்பூர் -- தர்பேஷ்பூர் சாலையில், 4 ரோடுகள் சந்திப்பு ஒன்று விடுதலைப் படை ஆதிக்கத்தில் வந்துள்ளது; இதனால் 10 கிராமங்கள்மீது பாகிஸ்தான் படைகள் ஆதிக்கம் இழந்துவிட்டனர்.

அமெரிக்க டாங்கிகள் பிடிபட்டன

ஜெஸ்சூர் மாவட்டத்தில் விடுதலை செய்யப்பட்ட பகுதிகளில், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஐந்து டாங்கிகளை விடுதலைப் படையினர் கைப்பற்றினர்; பாகிஸ்தான் இராணுவத்தினர் அவற்றைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

விடுதலைப் படை முன்னேற்றம்

சில்ஹெட் மாவட்டத்தில் ஜாரிகஞ்சு, அத்திராம் ஆகிய இடங்களில் அடைந்த வெற்றியை அடுத்து, விடுதலைப் படைகள் மேலும் முன்னேறி வருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இத்தனை நாட்களாகப் பாகிஸ்தான் படை நிலைபெற்றிருந்த பல இடங்களில் கடும் சண்டை நடந்துவருகிறது.

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

ஜெஸ்சூர் மாவட்டத்தில் ஜிமோன் நகர் அருகில் தரைப் படைக்கு உதவிய பாகிஸ்தான் வேட்டை விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

பாகிஸ்தான் படைப் பிரிவு நாற்புறமும் சூழப்பட்டது

வங்காள தேசத்தில் குஷ்டியா மாவட்டத்தில் ஜிபான் நகர் போலீசு நிலையத்தின் எல்லையில் உள்ள தத்தா நகர் விவசாயப் பண்ணைக்கு அருகில் ஒரு பாகிஸ்தான் படைப் பிரிவை எல்லாப் பக்கங்களிலும் வங்காள தேச விடுதலைப் படை சூழ்ந்துகொண்டிருக்கிறது.

'பாகிஸ்தான் படை பிரிவைச் சரணடையுமாறு கூறியிருக்கிறோம்; என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்' என்று விடுதலைப் படை தளபதிகள் கூறினர்.

தத்தாநகர் விவசாயப் பண்ணை விடுதலைப் படையின் வசமாகிவிட்டது; இங்கு ஒரு கமயெனிப் படைப் பிரிவு அளவுள்ள பாகிஸ்தான் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடும்போருக்குப் பின் இராணுவ நிலை பிடிபட்டது

தினஜ்பூர் மாவட்டத்தில் அமர்கானு என்ற இடத்தில் இருந்த பாகிஸ்தான் இராணுவ நிலையை விடுதலைப் படையினர் தாக்கினர்; கடுமையான போருக்குப் பிறகு இராணுவ நிலைபிடிபட்டது; பாகிஸ்தானியர்களுக்குக் கடும் சேதம் ஏற்பட்டது.

தினஜ்பூர் மாவட்டத்தில் ஜக்தல் ஹாட் என்ற இடத்தில் இருந்த பாகிஸ்தான் இராணுவ காவல் சாவடியையும் விடுதலைப் படையினர் பிடித்தார்கள்.

மக்கள் மீது குண்டு வீச்சு

ஜெஸ்சூர் மாவட்டத்தில் காசம்பூர் என்ற பகுதியில் பாகிஸ்தான் படை விமானங்கள் மக்கள்மீது குண்டுகளை வீசின; 5 பேர் மாண்டனர்.

விடுதலைப் படையினர் விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சுடத் தொடங்கியதும் பாகிஸ்தான் விமானங்கள் ஓட்டம் பிடித்தன.

அகதிகட்கு அமெரிக்காவிலிருந்து போர்வை

விரைந்து கிடைக்க வாடகை விமான ஏற்பாடு

கல்கத்தா, நவ. 23—

இந்தியாவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதி முகாம்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் போர்வைகளை விரைந்து அனுப்புவதன் பொருட்டு, பல்வேறு இடங்களிலிருந்து கொண்டுவர அமெரிக்க அரசு பல விமானங்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

மாபெரும் 'டி.சி.-8' ரக விமானங்கள் நான்கில் ஏறத்தாழ 3,14,000 இராத்தல் எடையுள்ள கம்பளிப் போர்வைகள் இங்கு வந்து இறங்கியுள்ளன.

இதற்குமுன், நவம்பர் முதல் வாரத்தில் அமெரிக்கஅரசு அமர்த்திய ஐந்து விமானங்களில் ஏறத்தாழ 240 டன் கம்பளிப் போர்வைகளும், சுமார் 47 டன் மருந்துகளும் -- இவை அனைத்தும் 'யுனிசெஃப்' நன்கொடைகள் -- அகதிகள் துயர் துடைக்க இங்கு வந்து சேர்ந்தன.

அக்டோபர் 27 முடிய இந்தியாவில் அகதிகள் துயர்துடைப்புத் திட்டத்துக்கு அமெரிக்கா வழங்கிய உதவி மொத்தம் 8,92,57 000 டாலர் (ஏறத்தாழ ரூ. 67 கோடி) ஆகும்.

என்று, அந்தக் குழுவின் தலைவரும், மாவட்டக் கலெக்டருமான சீதாராமதாஸ் கூறினர்.

"ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்படும் 'அன்னை அஞ்சுகம் திருமண மண்டபமும்' விரைவில் கட்டி முடிக்கப்படும்" என அவர் சொன்னர்.

ஐநூறு பெட்டிகளில் 6,57,000 போர்வைகள்

காலிப் பெட்டிகள் குடிசைகளாக மாறும்

பாகிஸ்தான் அகதிகளுக்காக 12 50 இலட்சம் டாலர் மதிப்புள்ள 6,57,000 போர்வைகளை ஏற்றிக்கொண்டு அமெரிக்கக் கப்பல் ஒன்று கல்கத்தா நோக்கி வந்து கொண்டிருக்கிறது; டிசம்பர்மாதத் துவக்கத்தில் அது வந்து சேரும்.

போர்வைகள் அனைத்தும் 500 பெரிய பெட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கின்றன. மிகச் சிறந்த ஒட்டுப் பலகைகொண்டு தயாரித்துள்ள இந்தப் பெட்டிகளை இந்தியாவில் அகதிகள் அவசரத்துக்கு உறைவிடமாக (குடிசைகளாக)ப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அதற்கேற்றவாறு பெட்டிகளைச் செய்திருக்கின்றனர்.

மேலும் 4,70,000 போர்வைகளைக் கப்பலேற்றி அனுப்பவும், 1,20,000 போர்வைகள் விமானம் மூலம் அனுப்பவும் அமெரிக்க அரசு வெளியுறவுத் துறை திட்டமிட்டு வருகிறது. இப்போர்வைகளின் விலை பத்து இலட்சம் டாலருக்கு மேலாகும்.

வங்கதேச அகதிகள் நாடு திரும்ப வாய்ப்பு

அமெரிக்கா உருவாக்கும் பல கோடி ரூபாய் திட்டம்

வாஷிங்டன், நவ. 22—

இந்தியாவில் உள்ள அகதிகளைக் கிழக்கு வங்கத்துக்குத் திருப்பிச் செல்லும்படிச் செய்யப் பல கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றக்கூடிய ஒரு திட்டத்தை நிக்சன் அரசாங்கம் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

அகதிகள் திரும்பிச் சென்றல் அவர்கள் குடியிருப்பதற்கான வசதி செய்வது --- மற்றப் பொருள்கள் அளித்து உதவுவது ஆகியவைகளுக்காக இந்தப் பெருந்தொகை செலவாகும் என்றும் இத்திட்டத்தை நிறைவேற்றினல் அகதிகள் தாமாகவே திரும்பிப் போகும்படிச் செய்ய முடியும் என்றும் கருதப்படுகிறது.

சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தின் உதவி நிர்வாகியான மாரிஸ் வில்லியப்ஸ் இந்தத் திட்டத்தைத் தயாரித்து வருகிறர்; இவர் அண்மையில் இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கும் வந்து நிலைமையை நேரில் பார்த்துத் திரும்பிப்போனவர்.

"அமெரிக்கா 7 முதல் 10 கோடி டாலர் வரை செலவிடுவதானல், முதலில் 10 இலட்சம் அகதிகள் தாமாகவே கிழக்குப் பாகிஸ்தானுக்கு திரும்பிச்சென்று விடுவார்கள்; பின்னல் மற்ற அகதிகளும் செல்வார்கள்" என்று அவர் மதிப்பிடுகிறர்.

செனட் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

இந்தத் திட்டத்தை அமெரிக்க செனட் -- காங்கிரசு உறுப்பினர்கள் கடுமையாக எதிர்க்கிறர்கள்.

"மனிதாபிமான அடிப்படையில் அல்லாமல் வேறு அடிப்படையில் உதவிகளைத் தரக்கூடாது--- என்று அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இந்தத் திட்டம் விரோதமானது" என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறர்கள்.

எட்வர்ட் கென்னடி வருத்தம்

"பாகிஸ்தான் இராணுவ ஆட்சியைத் திருப்திப்படுத்தும் முறையில் நிக்சன் நிர்வாகம் இன்னமும் முயலுவதுபற்றி தாம் வருந்துவதாக செனட் உறுப்பினர் எட்வர்ட் கென்னடி கூறினர்.

"கிழக்கு வங்காளப் பிரச்சினையில் முடிவு காணும் வரையில் பாகிஸ்தானுக்குப் பொருளாதார -- இராணுவ உதவிகளை அளிக்கக்கூடாது என்று பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியுள்ள திருத்தத்திற்கு இந்தத் திட்டம் விரோதமானது என்று கார்னீலியஸ் கல்லாகர் கூறினர்.

சிறிய விவசாயிகளுக்கு நலம் பயக்கும் திட்டம்

பயன்படுத்திக் கொள்ளுமாறு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் வலியுறுத்தல்

குடந்தை, நவ. 22—

"சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், விரைவில் தென்னுற்காடு, மதுரை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

"இந்தத் திட்டம் இப்போது நெல்லை மாவட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

"இந்தத் திட்டத்தின்கீழ் சிறிய விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கடனுதவிகளை, அவர்கள் 5 ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம்; கிணறுகளில் தண்ணீர் வராவிட்டால், இந்தக் கடன் தொகைகள் 'வாரக் கணக்காக'த் தள்ளுபடி செய்யப்படும்.

"இந்தத் திட்டத்தை தஞ்சை மாவட்டத்துக்கு விரிவுபடுத்துவது பற்றியும் அரசு யோசித்து வருகிறது"

என்று வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், குடந்தை மத்திய கூட்டுறவு பாங்கியின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விவசாயிகளுக்குக் கடனுதவி வழங்குவதில் நமது மாநிலம் முன்னணியில் இருந்த போதிலும், 32 முதல் 36 சதவிகிதம் பேர் வரைதான் அதைப்பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பருப்பு வகைகள் சாகுபடிக்கு விரைவுத் திட்டம்

"தமிழ்நாட்டில் ரூ. 1-கோடி செலவில் பருப்பு வகைகளைச் சாகுபடி செய்வதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

"இந்தத் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டில் 23 இலட்சம் ஏக்கரில் சுமார் 3 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படும்; இது கூடப் போதாது; ஏனெனில், நம் மாநிலத்துக்கு ஆண்டில் 7 அல்லது 8 இலட்சம் டன் பருப்பு வகைகள் தேவைப்படுகிறது.

திருவெண்காட்டில் புதையுண்டு கிடந்த சோழர் காலச் சிலைகள்

தஞ்சைக் கலைக்கூடத்திற்கு தமிழக அரசு ஆணை

சஞ்சை, நவ. 22—

தஞ்சை அரண்மனைக் கலைக்கூடத்திற்கு, திருவெண்காட்டிலிருந்து 1967-ல் தோண்டியெடுக்கப்பட்ட -- 1,000 ஆண்டுகளுக்கு முந்திய சோழர் காலத்தியது என்று சொல்லப்படும் மிக அபூர்வமான சுந்தரர், பரவை நாச்சியார், வள்ளி -- தெய்வயானையுடன் கூடிய வில்லேந்திய வேலன் முதலிய 16 ஐம்பொன் விக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டன.

அவைகளை சென்னையிலுள்ள மியூசியத்திற்கு அனுப்பிவிடும்படியும், சட்டப்படி அப்படித்தான் செய்யவேண்டும் என்றும் தமிழக அரசு உத்தரவு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

வங்க தேச அகதிகட்கு பிரிட்டன் உதவி

புதுடில்லி, நவ. 23—

இந்தியாவில் வந்து குவிந்துள்ள கிழக்கு வங்க அகதிகள் நிவாரணத்திற்கு உதவுவதற்காக ஒரு மிலியன் பவுன்களுக்கான (ரூ. 1 80 கோடி) 'செக்' ஒன்றை இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவரண் சிங்கிடம் பிரிட்டிஷ் வெளியுதவி அமைச்சர் திரு. ரிச்சர்டு உட் சேர்ப்பித்தார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதுவர் மூலம் இந்திய மறுவாழ்விப்புத் துறை அமைச்சகத்தில், 10 இலட்சம் பவுன்களுக்கான 'செக்' ஒன்று அளிக்கப்பட்டது; அகதிகளுக்குத் தேவையான உடைகளை இங்கேயே வாங்கிக் கொள்வதற்காக இந்தத் தொகை அளிக்கப்பட்டது.

இதுவரை அளிக்கப்பட்ட தொகையெல்லாம் பிரிட்டன் சென்ற ஜூன் மாதம் அறிவித்த துயர் தணிப்பு உதவி ஒப்பந்தப்படி அளிக்கப்பட்டவையாகும்; இது முடிந்ததும், இப்போது பிரிட்டன் மேலும் ரூ. 13.50 கோடி துயர் தணிப்பு உதவி வழங்க முன்வந்து அதற்கான அறிவிப்பும் செய்துள்ளது.

2 இலட்சம் போர்வைகள்

கிழக்கு வங்காள அகதிகளின் உதவிக்காக 2 இலட்சம் போர்வைகள் பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன; பிரிட்டிஷ் மக்களின் நன்கொடை இது. இதனை ஏற்றிக்கொண்டு 11 விமானங்கள் கல்கத்தா வருகின்றன; விமானச் செலவை பிரிட்டிஷ் அரசே ஏற்றுக்கொள்கிறது.

'தி பிப்பிள்' என்ற பிரிட்டிஷ் வார இதழ் விடுத்த வேண்டுகோளின்படி இந்த 2 இலட்சம் போர்வைகளைப் பிரிட்டிஷ் மக்கள் நன்கொடையளித்துள்ளனர்.

நிலத்தடி நீர்வளம்

காவிரிப்படுகையில் நல்வாய்ப்பு

கருத்தரங்கில் நிபுணர் தகவல்

கோவை, நவ. 22-

"தமிழ்நாட்டில் சுமார் 80 சதவிகிதப் பகுதிகளில் நிலத்தடியில் நீர்வளம் சொற்பமாகவே உள்ளது; கடுமையான பாறைகள் இருப்பதே காரணமாகும்"

என்று நிலவியல் நிபுணர் வி. கோபால் கூறினர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடந்த 'நிலத்தடி நீர்' பற்றிய கருத்தரங்கில் அவர் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வாசித்தார்; அவர் மேலும் கூறியுள்ள யோசனைகள் வருமாறு:—

"கடுமையாகப் பாறைகள் உள்ள பகுதிகளில் கிணறுகளைத் தோண்டலாம்; இதர பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பது பயனுள்ளதாக இருக்கலாம்.

"காவிரிப் பகுதியில் நிலத்தடி நீர் வள மேம்பாட்டுக்குச் சிறந்த வாய்ப்பு உள்ளது; தாமிரவருணி, வைம்பாறு, வைகை, பொன்னையாறு, பாலாறு ஆகியவற்றில் குறைந்த அளவு நிலத்தடி நீர் வள வாய்ப்புக்களே உள்ளன."

இந்தியா -- இலங்கை இடையே 'மின்சார உறவு'

தேவைப்படும் காலத்தில் மின்சக்திப் பரிமாற்றம் நடக்கும்

ரூ. 6 கோடியில் திட்டம் -- கடலடிக் கம்பி மூலம் இணைப்பு

சென்னை, நவ. 22 —

"இந்தியா -- இலங்கை மின்சார 'கிரிட்'டுகள் இணைக்கப்படும்; இதன் விளைவாக ஆண்டுக்கு 100 மெகாவாட் முதல் 150 மெகாவாட் வரையில் மின்சாரத்தை இரு நாடுகளும் பரிவர்த்தனை செய்துகொள்ளும்.

"இந்தியாவுக்கும் -- இலங்கைக்கும் இடையே உள்ள கடலுக்கு அடியிலே ஒரு கேபிளை (புதை கம்பி) அமைப்பதன் மூலம், இரு நாடுகளின் மின்சார 'கிரிட்'டுகளும் இணைக்கப்படும்"

என்று மத்திய பாசன விசை அமைச்சர் கே. எல். ராவ், சென்னையில் நிருபர்களிடம் கூறினர்.

டாக்டர் ராவ் இலங்கை சென்றிருந்தார்; தலைமையமைச்சர் சிரிமாவோ பண்டாரநாயகாவுடன் அவர் அங்கு பேச்சு நடத்தினர்.

"இரு நாடுகளிடையே மின்விசையைப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் ஏற்பாடு பிரிட்டனுக்கும் — பிரான்சுக்குமிடையே உள்ளது; அதேமாதிரி ஏற்பாடு இந்தியாவுக்கும் — இலங்கைக்குமிடையே உருவாகும்" என்று அவர் சொன்னர்.

இத்திட்டத்திற்கு ரூ. 5 கோடி முதல் ரூ. 6 கோடி வரையில் செலவாகும்; இத்திட்டம் முடிவடைய இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகும்; பின்னர் மின்சார 'கிரிட்' பற்றிய விவரங்கள் குறித்து இரு நாடுகளின் அதிகாரிகளும் பேச்சு நடத்துவார்கள்.

ஒவ்வொரு ஆண்டிலும் முதல் மூன்று மாதங்களில் தென்னிந்தியா தனது மின் விசையை இலங்கைக்கு அளிக்கலாம் என்று அவர் இலங்கைத் தலைமையமைச்சரிடம் கூறியதாகத் தெரிகிறது.

முதல் மூன்று மாதங்களில் இலங்கையின் மின்விசை உற்பத்தி குறைவு; ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தென்னிந்தியாவில் மின்விசை பற்றாக்குறையாக இருக்கும். அந்த மூன்று மாதங்களில் இலங்கை தனது மின் விசையை இந்தியாவுக்கு அளிக்கலாம்.

களையெடுப்புக்குப் பயன்படும் 'புல்'

பயிரை அழிப்பதில் வெட்டுக்கிளி -- எலி இவற்றோடு 'களை'யும் சேர்ந்துகொள்கிறது.

'களை'யை எடுப்பதே பயிரிடுவது வதுபோல் ஒரு பெரிய வேலையாக இருக்கிறது.

இந்த வேலையைச் செய்ய மருந்துச் சக்தியுடன்கூடிய ஒரு வகை 'புல்'லைப் பயன்படுத்தலாம் என்று ஷெல் நிறுவனத்தார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மருந்துச் சக்தியுடைய புல், சில வாரங்களுக்குத்தான் உயிரோடு இருக்கும்; அப்போது பயிர்களினூடே தோன்றி -- பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும் களைப் பயிர்களை வளர விடாமல் பட்டுவிடச் செய்கிறது -- இந்தப் புல்.

வேரூன்றி நிலைத்த பிறகு, களை, பயிரின் வளர்ச்சிக்கு ஊறு செய்ய முடியாது; ஆனல் அந்த ஆரம்பக் காலத்தில் களையை அழிக்க வேண்டியது பயிர்ப் பாதுகாப்புக்கு மிக அவசியம்; அந்த வேலையை இந்தப் புல் செய்கிறது.

ஆரம்பக் காலத்தில் பயிரைப் பாதுகாத்துவிட்டு, பின்னர் சில வாரங்களில் இதுவும் தானே அழிந்துவிடும்.

வாழை, கோகோ, காப்பி, டீ, நிலக்கடலை, நெல் மற்றும் கரும்புப் பயிர்களுக்கான மருந்துப் புல்லை இந்நிறுவனத்தினர் சோதித்துப் பார்த்து, 'மிகவும் ஏற்றது' என்று நிரூபித்துள்ளனர்.

மூச்சுத் திணறலுக்கு முதலுதவி -- கருவி கண்டுபிடிப்பு

ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளின் சுவாசம் தடைப்படும்போது அவர்களின் வாயோடு வாய் வைத்து ஊதி -- மூச்சு ஓட்டத்தைச் சீராக்க முதல் உதவி முறையில் மருத்துவ நிபுணர்கள் முயற்சி செய்வார்கள்.

இந்த முதலுதவிச் சிகிச்சைக்குத் தேவைப்படும் எல்லா இயக்கங்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத் தரையடி நீர் வெளிக்கொணரும் திட்டம்

தஞ்சையில் முதல் கட்டம் துவக்கம்

ரூ. 26.25 கோடி செலவில் 30 மாதங்களில் முடிவுறும்

சென்னை, நவ. 22—

தமிழகத் தரையடி நீரைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துவதற்கான ரூ. 26 25 கோடித் திட்டம் விரைவிலேயே தஞ்சை மாவட்டத்தில் செயல்படவிருக்கிறது; இது குறித்த ஆய்வு வேலைகள் எல்லாம் இங்கு முடிவடைந்துவிட்டன.

தரையடி நீரைப் பயன்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டம் தஞ்சையில் துவங்கவிருக்கின்றது.

இங்கு 7,000 வடிமுனைக் கிணறுகளும், 4,000 பம்பு செட்டுகளும், 90 நடுத்தரக் குழாய்க் கிணறுகளும் ஏற்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

தமிழ்நாட்டில் இதர இடங்களில் தரையடி நீர்வாய்ப்புக்கள் குறித்து ஆய்வு நடந்துவருகிறது. இது முடிவடைந்ததும், இதன் இரண்டாவது கட்டப் பணி திருச்சி மாவட்டத்திலும், தென்னுற்காடு மாவட்டத்திலும் துவக்கப்படும். இதன்படி, திருச்சியில் 400 குழாய்க் கிணறுகளும் -- தென்னுற்காடு மாவட்டத்தில் 3000 குழாய்க் கிணறுகளும் நிறுவப்படும். அடுத்த ஆண்டு மத்தியில் இது முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசியாக மூன்றுவது கட்ட வேலை, தமிழ்நாட்டின் மலைப் பகுதிகளான சேலம், தருமபுரி, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டங்களில் நிறுவப்படவிருக்கும் குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை முடிவு செய்யப்படும்.

இந்தத் திட்டம் முழுவதுமே இப்போதிலிருந்து அடுத்த 30 மாதங்களுக்குள் முடிவடையும் என்று கருதப்படுகிறது.

பசுமைப் புரட்சியின் ஓர் அம்சமாகக் கருதப்படும் தரையடி நீரைக் கண்டுபிடிக்கும் பணியுடன் இத்திட்டம் நின்றுவிடுவதில்லை.

செயல்பட்டு வரும் பம்பு செட்டுகளின் திறனைப் பெருக்குவது -- சிக்கனமாக நீரைப் பயன்படுத்துவது -- கிடைக்கும் நீரை அதிகபட்ச அளவு விவசாயத்துக்குப் பயன்படுத்துவது ஆகிய பிரச்சினைகள் குறித்தும் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுகள் நடத்தப்படவிருக்கின்றன.

உலக பாங்கியின் உதவியுடன் செயல்படவிருக்கும் இத்திட்டத்துக்கான நிதி, வேளாண்மை மறு நிதி நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும்.

ரூ. 356 கோடி அந்நிய நிதியுதவி

நாடுகள் வாரியாக விவரம்

புதுடில்லி, நவ. 23—

1971-ம் ஆண்டு ஏப்ரலுக்கும் -- செப்டம்பருக்கும் இடையில் ரூ. 356 கோடிக்கான அந்நிய நிதியுதவி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கின்றன.

இதில் திட்டப் பிணைப்பு இல்லாத உதவி ரூ. 122 கோடி; திட்ட உதவி ரூ. 234 கோடி; திட்டப் பிணைப்பில்லா உதவியில் ரூ. 40 கோடி கடனைத் திருப்பித் தருவதற்காகும்.

இந்த உதவி ஒப்பந்தங்கள், நாடுகள்வாரியாக விவரம்:—

கனடா:—திட்டப் பிணைப்பு இல்லாத உதவி 4 726 கோடி டாலர்; திட்ட உதவி 27.80 இலட்சம் டாலர்.

பிரான்சு: திட்டப் பிணைப்பு இல்லாத உதவி 1.940 கோடி டாலர்; திட்ட உதவி 1 260 கோடி டாலர்.

திட்டப் பிணைப்பு இல்லாத உதவி -- நாடுகள் வாரியாக:—

ஜெர்மனி:—81.90 இலட்சம் டாலர்.

ஜப்பான்:—4 599 கோடி டாலர்.

நெதர்லாந்து:—1.459 கோடி டாலர்.

பிரிட்டன்:—1 800 கோடி டாலர்.

அமெரிக்கா:—87.30 இலட்சம் டாலர்.

திட்ட உதவி -- நாடுகள் வாரியாக:—சுவிடன் 50 இலட்சம் டாலர்.

அனைத்து நாட்டு வளர்ச்சி உதவி நிறுவனம்: 27.70 கோடி டாலர்.

கல்பாக்கத்தில் அணு ஆய்வுக் கூடம்

பம்பாயில் உள்ளதைப் போல் அமையும்

சென்னை, நவ. 22—

"ரூ. 50 கோடி செலவில் சென்னையில் தொடங்கப்போகும் அணு உலை ஆராய்ச்சி நிலையம், பம்பாயில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தைபோன்ற ஒரு பெரிய நிலையமாக இருக்கும்."

என்று அணுசக்தி ஆராய்ச்சிக் கமிஷன் தலைவர் விக்ரம் சாராபாய் இங்கு கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அணு உலைகளின் மாதிரி அமைப்பு --- மேம்பாடு ஆகிய பணிகளை இந்த நிலையம் செய்யும்; கல்பாக்கம் அணுசக்தி நிலையத்துக்கும் — மாமலலபுரத்துக்கும் இடையே இது நிறுவப்படும்.

"கல்பாக்கம் அணுசக்தி நிலையத்தில் 2-வது யூனிட் அமைப்பதற்கான வேலைகள் தொடங்கி விட்டன; முதல் யூனிட் வேலை திருப்திகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது."

இந்தியாவிலேயே பெரிய 'கம்ப்யூட்டர்'

சென்னை, நவ. 22—

சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தில் (ஐ ஐ டி), ரூ 1 50 கோடி செலவில் ஒரு பெரிய கணக்கீட்டு இயந்திரம் (கம்ப்யூட்டர்) விரைவில் அமைக்கப்படும்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய கம்ப்யூட்டர் இயந்திரமாக அது இருக்கும்.

இது ஒரு புதிய ரக கணக்கிடும் இயந்திரம் ஆகும்; தங்களுடைய கேள்விகளுக்கு விடைகளைக் கோருபவர்கள், விடைகளைப் பெறுவதற்காக இயந்திரம் உள்ள இடத்திற்கு வரவேண்டிய அவசியம் இராது.

பெங்களூர், சென்னை, ஐதராபாத் ஆகிய இடங்களில் ஒரு பெரிய கம்ப்யூட்டர் நிலையத்தை அமைப்பதென்று கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கேள்விகளை ஆங்காங்குள்ள நிலையத்திற்கு அனுப்பலாம்; விரைவில் அமைக்கப்படவிருக்கும் பல்வேறு முனைகளில் ஏதாவது ஒன்றில் அக்கேள்விகளுக்கான விடைகள் கிடைக்கும்.

முந்திரிப் பழத்திலிருந்து மதுத் தயாரிப்பு

தமிழ்நாட்டில் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு

முந்திரிச் சாகுபடியைப் பெருக்கத் திட்டம்

சென்னை, நவ. 22—

தமிழ்நாட்டில் முந்திரிச் சாகுபடியைத் தீவிரப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தற்போது 75,000 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிடப்படுகிறது; புதிய திட்டத்தின்படி, இது ஓர் இலட்சம் ஏக்கராகக் கூடிய விரைவில் அதிகரிக்கும்.

தமிழ்நாட்டில் பயிராகும் முந்திரிகள் அனைத்தும், பக்குவப்படுத்துவதற்காகக் கேரளத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு இப்போது அனுப்பப்படுகிறது; எனவே, தமிழ்நாட்டிலேயே முந்திரியைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதி செய்வதன் மூலம் ரூ. 60 கோடி அந்நியச் செலாவணி கிடைத்து வருகிறது.

முந்திரிப் பருப்பை எடுத்த பிறகு மிஞ்சும் முந்திரிப் பழம் வீணாக எறிந்துவிடப்படுகிறது; எனவே, அப்பழத்திலிருந்து 'பெனி' என்ற மது தயாரிக்கும் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கிறது; இம்மதுவைத் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க யாரேனும் முன்வந்தால் அவர்களுக்கு முந்திரிப் பழம் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும்.

இத்தொழிற்சாலைக்குத் தொடக்க முதலீடு ரூ. 50,000 ஆகக் கூடும்; எனவே, தொழிற்சாலை தொடங்க முன்வருபவர்களுக்கு அரசு, உரிய உதவிகளைச் செய்யக்கூடும்.

'பெனி' மது, மங்களூர் போன்ற இடங்களில் விரும்பி அருந்தப்படுகிறது; ஆனல், தமிழ்நாட்டில் இதைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுகூட இல்லை.

எந்நேரத்திலும் போர் வெடிக்கலாம்

யாகியா கானின் 'வெளிவேடம்' விரைவில் கலையும்

எல்லையில் போர் ஆயத்தங்கள் மும்முரம்— தளபதிகளுடன் தீவிர யோசனை

புதுடில்லி, நவ. 23—

கடந்த நான்கைந்து நாட்களாக எல்லைப் பகுதியில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளையும், பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் கவனிக்குமிடத்து, எந்த நேரத்திலும் போர் வெடிக்கும் என்றே தோன்றுகிறது.

"போரைத் தாம் விரும்பாதது போலவும், இந்தியாவுடன் அமைதியான தீர்வுகாண விழைவது போலவும் யாகியா கான் பேசிவருவது வெறும் பாசாங்கே" என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

பேச்சொன்றும் செயலொன்றுமாக இருந்துவருவது பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் வாடிக்கையாகிவிட்டது; ஈத் பெருநாளையொட்டி அவர் விடுத்த செய்தியில், இந்தியாவுடன் நட்பாக இருக்கத் தாம் விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தது, வெளியுலகை ஏமாற்றும் தந்திரமே என்பது புரிகிறது; ஏனெனில், அதற்கான திட்டவட்டமான யோசனை ஒன்றும் யாகியா கானிடமிருந்து இதுவரை வரவில்லை.

படைகள் குவிப்பு

பிரோஸ்பூர், நவ. 23—

மேற்கு முனையில் இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்—மேற்கு வங்க நாதியா, மூர்ஷிதாபாத் மாவட்டங்களை ஒட்டியுள்ள பாகிஸ்தான் இராணுவத்தில் மேலும் புதிய பட்டாளங்கள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் எல்லைக்கு இன்னும் நெருக்கமாகப் பீரங்கிப் படைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நம்பத் தகுந்த தகவல்கள் கூறுகின்றன.

கடந்த சில நாட்களாகப் பாகிஸ்தான் உளவாளிகள் செய்த முயற்சிகளை பஞ்சாப் போலீசார் தடுத்துவிட்டனர்; இரவு பகலாக இந்திய எல்லையில் எச்சரிக்கை நிலை இருந்துவருகிறது; இதுவரையில் 2 பாகிஸ்தான் உளவாளிகள் கொல்லப்பட்டனர்; சுமார் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியப் பகுதிக்குள் பாகிஸ்தான் விமானங்கள் ஊடுருவியது

புதுடில்லி, நவ. 23—

மேற்கு வங்காளத்தில் ராஞகர் அருகிலுள்ள பாமரா பகுதியில் நான்கு பாகிஸ்தான் சேபர் ஜெட் விமானங்கள் நேற்று பிற்பகலில் ஊடுருவியது; இந்த இடம் கல்கத்தாவிலிருந்து 65 மைல் தூரத்தில் இருக்கிறது.

இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் பாகிஸ்தான் விமானங்களை விரட்டியடித்தன.

கிழக்குப் பகுதியில் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய எல்லைக்குள் புகுந்து உளவு பார்க்க முயற்சித்திருப்பது இதுதான் முதல் தடவையாகும்.

இந்த விமானங்கள் இந்திய எல்லையின்மீது ஒன்றிரண்டு நிமிடங்கள்தான் பறந்தன; இந்திய விமானங்கள் சுடத் தொடங்கியவுடன் அவைகள் அவைகள் ஓட்டம் பிடித்தன.

பீரங்கிப் பிரயோகம் கடுமையாகிறது

இந்திய எல்லைகளில் பாகிஸ்தான் பீரங்கிப் பிரயோகம் வர வர கடுமையாகிக்கொண்டே வருகிறது.

மேற்கு முனையில், ஜம்மு-காஷ்மீர் பகுதியில் மட்டும்தான் தாக்குதல்கள் இருக்கின்றன.

ஆனல் கிழக்கு பகுதியில், வங்க தேசத்தைச் சுற்றி எல்லாப் பகுதிகளிலும் பீரங்கிப் பிரயோகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது; எல்லைக்கு அப்பால் உள்ள இந்தியக் கிராமங்களின் மீது அவர்கள், நினைத்தபடி சுடுகின்றனர்.

எல்லை மீறல்கள்

ஜம்மு-காஷ்மீர் பகுதியில், அக்டோபர் 1-ம்நாளிலிருந்து இதுவரையில் 220 எல்லை மீறல்கள் நடந்திருக்கின்றன.

இந்தச் சம்பவங்களைப் பற்றி ஐ. நா. பார்வையாளர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

★

ஷில்லாங்கில் ஒரு வீரத் தாய்!

ஷில்லாங், நவ. 23—

"எனது இரு பெண்களை இழந்தாலும் பரவாயில்லை; அதன் மூலமாவது வங்க தேசம் ஏற்படட்டும்"

என்று இரு புதல்விகளைப் பறிகொடுத்த ஓர் இந்தியத் தாய் கூறினார்.

கரீம் கஞ்சில் அவரது வீட்டின் அருகே பாகிஸ்தானின் குண்டுகள் விழுந்தபோது அவரது இரு புதல்விகளும் உயிரிழந்தனர்; அவரது மூன்றாவது குழந்தைக்கு (9 வயதுச் சிறுவன்) காயம் ஏற்பட்டது.

தானே ராஜா—தானே மந்திரி!

யாகியாகானின் கோமாளிக்கூத்து

புதுடில்லி, நவ. 23 –

"புதிய பாகிஸ்தான் அரசியல் அமைப்பின்கீழ் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால அமைச்சரவையில் தன்னுடைய தலைமையமைச்சராகத் தானே இருப்பதென பாகிஸ்தான் அதிபர் யாகியாகான் திட்டமிட்டிருக்கிறார்"

என்று லாகூரிலிருந்து வெளியாகும் 'நவாய் வகத்' என்ற ஏடு கூறுகிறது.

பாகிஸ்தான் தேசிய சட்டசபை டிசம்பர் 28-ஆம் நாள் கூடும்; ஏறக்குறைய அதே சமயத்தில் இடைக்கால அரசும் பதவி ஏற்குமென்று தெரிகிறது.

எந்தெந்தக் கட்சிகள் சேர முன்வருகின்றனவோ அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் தேசிய அரசில் இடம் பெறுவர் என்று தெரிகிறது.

"யாகியா கானின் ஆலோசகர் குழு டிசம்பர் மூன்றாவது வாரத்தில் விலகும்" என்று கராச்சி பத்திரிகை ஒன்று கூறுகிறது.

எல்லைப்புறத்தில் யாகியா கான்

சயால்கோட் பகுதியிலுள்ள எல்லைப்புறப் பகுதிகளை பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் பார்வையிட்டார்; அவருடன் பாகிஸ்தான் தளபதி வந்திருந்தார்.

போரினல் எந்தப் பிரச்சினையும் தீராதென்றும், பாகிஸ்தான் சமாதானத்தையே விரும்புகிறதென்றும் யாகியாகான் போர் வீரர்களிடையே பேசுகையில் கூறினர்.

அகதிகள் முகாமில் தீ விபத்து

பாகிஸ்தானின் ஐந்தாம்படை வேலை?

மேகாலயத்தில் காசி மலைத் தொடர்ப் பகுதியில் எல்லைப் புறத்திலுள்ள இரண்டு அகதிகள் முகாம்களில் நேற்றும்—அதற்கு முன்னும் 270 கூடாரங்கள் தீயில் சிக்கி எரிந்தன.

இவற்றில் 3 வங்க அகதிகள் உயிருடன் கருகிச் செத்தனர்; 30 பேர் காயமடைந்தனர்.

தீ விபத்துக்களில், முனுஸ் முகாமிலும், மைலாவ் முகாமிலும் சுமார் 12,000 அகதிகள் வீடிழந்தனர்.

இம்மாதிரி முன்னல் நடந்த தீ விபத்துக்கள் தற்செயலாக நடந்தவை என்று நினைத்ததாகவும். இப்போது இது பாகிஸ்தானி ஐந்தாம் படையினர், நாச வேலைக்காரர்கள் கைவேலையாக இருக்கலாமென்று சந்தேகிப்பதாகவும் மேகாலய அதிகார வட்டாரங்கள் கருதுகின்றன.

இரயில்வேயில் திருட்டு மூலம் ஏற்பட்ட இழப்பு

புதுடில்லி, நவ. 23—

1970—71-ல் இரயில்களில் ஏற்றப்பட்ட சரக்குகள் திருட்டு மூலம் ரூ. 542.51 இலட்சம் இரயில்வேக்கு இழப்பு ஏற்பட்டது; அதே கால அளவில் இரயில்வே சொத்துக்கள்—சாதனங்கள் இழப்பு ரூ. 52.32 இலட்சமாகும்.

இத்தகவல்களை, நாடாளுமன்ற மேலவையில் துணை இரயில்வே அமைச்சர் குரேஷி தெரிவித்தார்.

புதிய நகராட்சிகள்

சென்னை, நவ. 23—

"மதுராந்தகம், கீழகாழி, சூரமங்கலம், குமாரபாளையம், பொன்மலை ஆகிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது" என்று தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புகின்றவர்கள், 'அரசு செயலாளர்—உள்ளாட்சித் துறை, சென்னை-9' எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

இட்லரையும் மிஞ்சுகிறது யாகியா கான் சர்வாதிகாரம்

வங்காளிகளைச் சித்திரவதை செய்யும் கொடுமை

உலகில் எங்கும் நிகழாத மிருக வெறியில் பாகிஸ்தான் இராணுவம்

கல்கத்தா, நவ. 23—

"வங்காள தேசத்தில் போர்க் கைதிகளை அடைத்து வைப்பதற்காக 100 முகாம்களைப் பாகிஸ்தான் இராணுவம் ஏற்படுத்தியிருக்கிறது; ஒவ்வொரு முகாமிலும் ஆயிரம் பேர் வீதம் மொத்தம் 1 இலட்சம் கைதிகளைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் பிடித்து வைத்திருக்கிறார்களாம்.

கைதிகளை இராணுவத்தினர் மிருகத்தனமாக நடத்துவது பற்றிய தகவல்கள் இப்போது கிடைத்திருக்கின்றன; கைதிகளுக்கு ஒரு நாள் உணவு 2 சப்பாத்திகள் மட்டும்தானும்; அவர்கள் வெறும் தரையில்தான் படுததுத் தூங்க வேண்டுமாம்.

சில கைதிகளைத் தலைகீழாகக் கட்டிவைத்துச் சவுக்கால் அடிக்கிறார்களாம்.

சிலரை நிற்கவைத்துக் காலில் தரையுடன் சேர்த்து ஆணி அடிக்கிறார்களாம்; பிறகு, காலில் உள்ள நகத்தை உருவி எடுக்கிறார்களாம்; கை விரல்களில் பெரிய ஊசியைக் கொண்டு குத்துகிறார்களாம்.

மற்றும் சில கைதிகளைப் பனிக் கட்டிகளின் மேல் ஆடையில்லாமல் மணிக்கணக்கில் உட்காரவைக்கிறார்களாம்.

சில கைதிகளின் தொடை—தோள் ஆகிய இடங்களில் உள்ள சதையை வெட்டியெடுக்கிறார்களாம்; வெட்டப்பட்ட பகுதியில் தீக்குச்சியைக் கொளுத்திச் சுடுகிறார்களாம்.

கைதிகளை நாட்கணக்கில் தூங்க விடுவதில்லை; தன்னை மீறிய தூக்கத்தில் அவர்கள் கண்ணை மூடினால் நிற்க வைத்து அடிக்கிறார்களாம்.

இதையெல்லாம்விட மிகக் கொடுமையான செயல் ஒன்றைம் பாகிஸ்தான் இராணுவத்தினர் செய்கிறார்கள்; அதாவது 4 அடி ஆழத்துக்குக் குழி தோண்டிக் கைதிகளை நிற்க வைதது மண்ணை மூடிவிடுகிறார்களாம்; தலை—மார்புப் பகுதி மட்டும் பூமிக்கு வெளியே தெரியும்.

இராணுவத்தினர் சில அடி தூரத்தில் நின்றுகொண்டு வெளியே தெரியும் தலைமீது சரமாரியாகக் கல்லை வீசுவார்களாம்; இரத்தம் கொட்ட—கதறிக் கதறி அவர்கள் சாவதைப் பார்த்து இரசிக்கிறார்களாம்!

பெண் கைதிகளைப் பாகிஸ்தான் இராணுவத்தினர், தங்கள் இரவு நேரக் கேளிக்கைகளுக்குப் பயன்படுத்துகிறார்களாம்; சில பெண்கள் சேலையை முறுக்கிக்கொண்டு தூக்கில் தொங்கிவிட்டார்களாம்.

"இரண்டாம் உலகப் போரின்போது, ஜெர்மனி சர்வாதிகாரி இட்லர், போர்க் கைதிகளை, வர்ணிக்க முடியாத அளவுக்குக் கொடுமை செய்தான்; அதையும் மீறிவிட்டது—பாகிஸ்தான் செய்யும் சித்திரவதை" என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களுக்குமான கருவிகள் ஒரு 'செட்டாக' வைக்கப்பட்டிருக்கும். வாய்-மூக்கு இரண்டையும் மூடும் அளவுக்கு ரப்பரினல் ஆன மூடி போன்ற சாதனம் ஒன்றும் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த முதலுதவிச் சிகிச்சைக்கு ஏற்ற நவீன கருவி ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூச்சுத் திணறத் தொடங்குவதை உணரும் நோயாளிகள் தாமே இந்த மூடியை முகத்தில் வைத்துக்கொண்டு—ஒரு விசையைத் தட்டிவிட்டுக் கொள்ளமுடியும்; அல்லது டாக்டர்கள் இதனை அவர்கள் முகத்தில் வைத்து விசையைத் தட்டிவிடலாம்; மிக எளிதாக இந்த முறையில் முதலுதவி சிகிச்சை பெற முடிகிறது.

வாயோடு வாய் வைத்து ஊதி சுவாசத்தைச் சுலபமாக்கும் முறை இந்த சாதனத்தைப்போல செம்மையாக—சீராக—நீண்டநேரம் நடைபெற இயலாது; அப்படி ஊதும் நபர், தானும் மூச்சை உள்ளுக்கு இழுக்கவேண்டியிருப்பதால் சில சிக்கல்கள் நேரிடும்.

நீண்டநேரம் செய்யவேண்டியிருந்தால் அதிலும் சங்கடங்கள் இருக்கும்; இக்குறைகளை எல்லாம் போக்கும் வகையில் புதிய சாதனம் இயங்குகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தானிய உற்பத்தியில் ஒரு சத விகிதமாகும்: 1970—71-ல் உற்பத்தி 10.70 கோடி டன்; 1971—72-ல் உணவு உற்பத்தி இலக்கு 11.2 கோடி டன்; 1972 அக்டோபா இறுதியில் கையிருப்பு 73.50 இலட்சம் டன்.

"பஞ்சம், வெள்ளத்துக்கிடையிலும் 48 இலட்சம் டன் அரிசி கொள்முதல் இலக்கு நிறைவேற்றப்படும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்கல் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.